## (ஊ) நடைமுறை மாதிரி அளவைகள்

பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தில் புள்ளிவிவர புலனுய்வுப் பிரிவு 1972இல் இரண்டு அளவைகளை நடாத்தியது. அவையாவன:-

(அ) புதிய வேளாண்மைக் கொடுகடன் திட்டத்தின்கீழ் கடன்களை மீள இறுக்கத் தவறியமை பற்றிய அளவை,

(ஆ) மிரிச, பேருவளை எல்லைப்பரப்புகளில் நடைபெறும் மீன்பிடிக் கைத்தொழிலின் அளவு, பயன்பாடு பற்றிய அளவை.

1973இல் முற்பகுதியில் நுகர்வோர் நிதி அளவையை நடாத்துவது பற்றியும் இக்காலப்பிரிவில் திட்டமிடப்பட்டது.

**புதிய வேளாண்மைக் கொடுகடன் திட்டத்தின்கீழ் கடன்கள் திருப்பிக் கொடுக்கத் தவறியமை பற்றிய அளவை**

கமத்தொழிற் சேவைத் திணைக்களத்தினுல் நிருவகிக்கப்பட்ட பழைய கொடுகடன் திட்டத்திற்குப்பதிலாக 1967இல் ஏற்படுத்தப்பட்ட புதிய வேளாண்மைக் கொடுகடன் திட்டத்தின் செயற்பாடு, கடன்களைத் திருப்பிப் பெறும் வீதத்தில் எந்தவித முன்னேற்றங்களையும் கொண்டுவரவில்லை. புதிய வேளாண்மைக் கொடுகடன் திட்டத்தின்கீழ் கடன்களை மீள இறுக்கத் தவறியமை 1971இல் மிக உயர்வான நிலையை அடைந்தது. அரசாங்கமும் மக்கள் வங்கியும் தொடர்ந்து செல்லும் பெரும் இழப்புக்களை எதிர்நோக்கவேண்டியேற்பட்டது. குறைந்த வீதத்திலேயே கடன்கள் திருப்பிக்கொடுக்கப்படுவதற்குரிய முக்கிய காரணங்களை அறிய இத்திட்டத்தின் செயற்பாடு பற்றிய கிராமிய மட்டத்தில் ஒரு மாதிரி அளவையை நடாத்துவது தேவையென மத்திய வங்கி கருதியது. இத்தீவில் கடன்கொடுக்கத் தவறியோரில் 841 பேர்கள் இம் மாதிரி அளவைக்கு பயன்படுத்தப்பட்டனர்.

அளவையில் சேகரிக்கப்பட்ட தரவுகளின் முதன்மையான விடயங்கள், புதிய வேளாண்மைக் கொடுகடன் திட்டம் புகுத்தப்பட்ட 1.9.67ஆம் ஆண்டிலிருந்து 31.12.70ஆம் ஆண்டுவரையுள்ள 40 மாதங்களை உள்ளடக்குகின்ற காலப்பகுதிக்காயது.

மாதிரியினுள் சேர்த்துக்கொள்ளப்பட்ட கடனை மீள இறுக்கத் தவறிய ஒவ்வொரு கடனாளியையும் பொறுத்தவரையில், இவ்வட்டவணையானது ஏனைய விபரங்களுடன் குடும்பப் பருமன், பள்ளி செல்லும் சிறுவர் எண்ணிக்கை பற்றியும், கல்வி, சடங்குகள், வழக்குத்தொடர்தல், திருமணம், நலமின்மை, நுகர்வோர் பொருட்கள், முதலாக்கம் என்பனவற்றில் ஏற்பட்ட பெரும்படியான செலவுகள் பற்றிய விபரங்களையும் பெறுவதற்கு அறிய முனைந்தது. கவனத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட காலப்பகுதியில் உள்ள ஒவ்வொரு வேளாண்மைப் பருவத்திலும் பயிர்செய்யப்பட்ட பரப்பளவு, விளைச்சலும் அதனுடைய பெறுமதியும், பயிர்களின் பாதிப்புப் பரப்பளவும் பதிவுசெய்யப்பட்

டது. அதேபோன்று, இவ்வட்டவணையானது வழங்கப்பட்ட கடன்களினதும், மீள இறுக்கப்பட்ட கடன்களினதும் பருவகாலத்திற்கேற்ற எண்ணீட்டினையும் பெற வழிகோலியது. கூட்டுறவுச் சங்கங்களினல் தொடர் செயல் செய்வதற்கு சுட்டிக்காட்டுபவைகளாக, நினைப்பூட்டுக் கடிதங்களின் எண்ணிக்கையும், கூட்டுறவு அலுவலர்களினல் கடனை மீள இறுக்கத்தவறியவர்களைக் காண எடுத்த முயற்சிகள் ஆகியவைகள் உள்ளடக்கப்பட்டன. அட்டவணையின் இறுதியில் உள்ள நேரடிக்கேள்வி, கடனை மீள இறுக்கத் தவறியமைக்குரிய காரணத்தை, கடனை மீளஇறுக்கத்தவறியவர்களின் வாயிலாக அறிய முயன்றது. இம்முடிவுகளின் சுருக்கம் கீழே தரப்பட்டுள்ளது :

மாதிரியில் எடுக்கப்பட்ட கடன்கட்டத் தவறியவர்களின் தொகை 841 ஆகும். இவ்விதம் தவறியோர்களின் சராசரிக் குடியிருப்பு அளவு 6.7 ஆட்களைக் கொண்டுவிளங்கியது. சராசரியாக நோக்குமிடத்து கடன்கட்டத் தவறியவர் ஒருவர் மாதம் ஒன்றிற்கு ரூ. 258.5 பெற்றூர். கடன்கட்டத் தவறிய, வருமானம் பெறுவோரில் உயர்மட்டத்திலுள்ள 10 சதவீதத்தினர் மொத்த வருமானத்தில் 36 சதவீதத்தினைப் பெற்றிருக்க கீழ்மட்ட 10 சதவீதத்தினர் மொத்த வருமானத்தில் 2 சதவீதத்தையே பெற்றனர்.

கடன்கட்டத்தவறிய ஒரு குடும்பத்தின் ஒரு பருவகால சராசரி வருவாய் ரூ. 1,551/- ஆக விளங்கியது. ஒரு குடும்பம் ஒரு பருவகாலத்தில் பெற்ற சராசரிக் கடன்பாடுகள், புதிய விவசாயக் கடன்களாகிய ரூ. 136.2 ஐயும் உள்ளடக்கி, ரூ. 306/– ஆக விளங்கியது. எல்லாக் கடன்களையும் உள்ளடக்கிய சராசரிக்கடன் சராசரி வருமானத்தில் ஏறக்குறைய 20 சதவீதமாகவிருந்தது.

ஒவ்வொரு விவசாயியும், ஏறக்குறைய 2.4 ஏக்கர் நிலத்தைப் பயிரிட்டனர். கடனுகப் பெறப்பட்ட தொகை பெற்ற வருமானத்திலும் பார்க்கப் பயிரிடப்பட்ட நிலப் பரப்பின் அளவுடனேயே பெருமளவு தொடர்பினைக் கொண்டிருந்தது.

சராசரியாகப் பார்க்குமிடத்து, சதவீதத்தைப் பொறுத்தவரையில், எல்லாக் கடன்களிலும் 24.2 சதவீதமாக புதிய விவசாயக் கடன்களே காலங்கடந்தவைகளாகக் காணப்படுகிறன. ஒவ்வொரு கடன்கட்டத் தவறிய விவசாயியும் புதிய விவசாயக் கடன்களில் ரூ. 492/- வெளிநிலுவையாகக் கொண்டிருந்தனர். இது மாதாந்த அடிப்படையில் பார்க்குமிடத்து ஒவ்வொரு கடன்கட்டத்தவறிய விவசாயியையும் பொறுத்தவரையில் ஏறக்குறைய ரூ. 12.3 ஆகக் காணப்படுகின்றது.

அளவீடு செய்த நேரத்தில் புதிய விவசாயக் கடன்களில் ஏறக்குறைய 54 சதவீதமே நிலுவையாக இருந்தது. வருமானத்தில் 8.8 சதவீதமே கடன்பட்ட தொகையாக விளங்க, வருமானத்தில் 4.8 சதவீதமே காலங்கடந்த தொகையாக இருந்தது. எல்லாக் கடன்களையும் பொறுத்தவரையில் வருமானத்தில் 19.7 சதவீதமே கடனுகப்பெற்ற தொகையாக விளங்க, வருமானத்தில் 12.6 சதவீதமே காலங்கடந்த தொகையாக விளங்கியது.

கடன்கட்டத் தவறியமைக்குரிய காரணத்தை தவறியோர் வாயிலாகவே கேள்விகள் கேட்டு அறிந்துகொள்ளத் தீர்மானிக்கப்பட்டது.

கொடுக்கப்பட்ட பதில்களை அடிப்படையாகக்கொண்டு கடன்கட்டத்தவறியமைக்குரிய 17 காரணங்களை இனங்காண முடிந்தது.

**அட்டவணை II (ஊ) 1**

**தவறுகளின் காரணமாக வகைப்படுத்தப்பட்ட மேலதிகக் கொடுப்பனவுத் தொகை**

| தவறுகளின் காரணம் | கடன் கட்டத் தவறியவர்கள் | | கொடுபடவேண்டிய புதிய விவசாயக் கடன்கள் | |
|---|---|---|---|---|
| | எண் | சதவீதம் | தொகை ரூ. | சதவீதம் |
| 1. பயிர் விளையாமை ... ... ... | 222 | 26.4 | 135,931 | 32.8 |
| 2. தாழ்ந்த வருமானம் ... ... ... | 145 | 17.2 | 66,968 | 16.2 |
| 3. திருப்பிக் கட்டும் நோக்கமின்மை ... ... | 101 | 12.0 | 60,503 | 14.6 |
| 4. நலமின்மை/இறப்பு ... ... | 75 | 8.9 | 36,680 | 8.8 |
| 5. கூட்டுறவு உத்தியோகத்தரின் கவனமின்மை ... | 74 | 8.8 | 26,122 | 6.3 |
| 6. கூட்டுறவுகளில் நிலவும் தகாத செயல்கள் .. | 66 | 7.8 | 20,803 | 5.0 |
| 7. அதிகரித்த செலவுகள் (சட்டபூர்வமான சடங்குகளோடு கூடிய) ... ... .. | 19 | 2.3 | 8,674 | 2.1 |
| 8. அநேகமாக எழுதப்பட்ட ஆலோசிக்கப்பட்ட கடன்கள் ... ... ... | 17 | 2.0 | 6,603 | 1.6 |
| 9. தகாத வழியில் பயன்படுத்தப்பட்ட கடன்கள் ... | 16 | 1.9 | 7,188 | 1.7 |
| 10. உடனடியாக அனுமதிக்கக்கூடிய கவனிக்கத்தக்க கடன்கள் .. ... ... ... | 14 | 1.7 | 7 163 | 1.7 |
| 11. நீர்ப்பாசன வசதிகளின் பற்றுக்குறை ... | 13 | 1.5 | 4,885 | 1.2 |
| 12. அதிகரித்த மூலதனச் செலவுகள் ... . | 4 | 0.5 | 2,915 | 0.7 |
| 13. அரசாங்க உத்தியோகத்தரின் தகாத செயல்கள் . | 5 | 0.6 | 3,234 | 0.8 |
| 14. அதிகரித்த கடன்பாடுகள் ... .. | 10 | 1.2 | 5,451 | 1.3 |
| 15. தொழிலின்மை ... ... ... | 3 | 0.4 | 1,005 | 0.2 |
| 16. அரசியல் தலையீடுகள் ... ... ... | 3 | 0.4 | 1,216 | 0.3 |
| 17. அரிசிப் பங்கீட்டுப் புத்தகங்களின் ஒப்படைப்புக்கான வசதிகளை நீக்குதல் ... ... | 2 | 0.2 | 75 | ... |
| 18. ஏனையவை ... ... ... ... | 52 | 6.2 | 19,282 | 4.7 |
| மொத்தம் ... | 841 | 100.0 | 414,698 | 100.0 |

சில காரணிகள் ஒன்றுடன் ஒன்று தொடர்புற்றுக் காணப்படுவதனால் அல்லது வெவ்வேறு பிரிவுகளாகக் குறிப்பாக வேறுபடுத்த முடியாமையினால் அவற்றினை ஒன்றாகச் சேர்க்கலாம்.

பயிர் விளையாமையே கடன்கட்டத் தவறியமைக்குரிய மிக முக்கியமான தனிக்காரணமாக இருந்தது. கிட்டத்தட்ட 26 சதவீதமான தவறியவர்கள், காலங் கடந்த கடன்களில் 32.8 சதவீதத்தினைத் திருப்பிக்கட்டவில்லை. பயிர் விளையாமை, குறிப்பாகச் சிறிய பயிரிடுவோர்களுக்கு இடையில் குறைந்த வருமானத்தை ஏற்படுத்தும். கிட்டத்தட்ட 17.2 சதவீதமான கடன்கட்டத் தவறியவர்கள் தம்குறைந்த வருமானமே, குறித்த நேரத்தில் திருப்பிப் பணம் கட்ட முடியாமைக்கு, முக்கிய காரணமாகக் காட்டினர். அத்துடன் அவர்கள்

16.2 சதவீதமான காலங்கடந்த கடன்களுக்கு வகை கூறினர். பயிர்விளையாமையே குறைந்த வருமானத்திற்கு முக்கிய காரணமாக இருப்பதனை மறுக்க முடியாது. அநேகமான கடன்கட்டத்தவறியவர்கள் குறைந்த வருமானத்தினை அதற்குரிய முக்கிய காரணமாகக் காட்டியபோதும், ஒரு சிலர் ஏனைய காரணிகளை மிக முக்கியமாகக் கருதினர். ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்ட குறைந்த வருமானம், பயிர் விளையாமை ஆகிய இரு மிக முக்கிய காரணங்களும், காலங்கடந்த கடன்களில் 49 வீதத்திற்குப் பொறுப்பாக விளங்கின. ஒரு பிரிவாகக் காட்டக்கூடிய, இன்னொரு வகையான காரணங்கள். கூட்டுறவு அலுவலர்களின் பொறுப்பற்ற தன்மையும் கூட்டுறவுச் சங்கங்களில் நிலவிய தகாத செயல்களுமேயாகும். கூட்டுறவு 'அலுவலர்கள் பொறுப்புணர்ச்சியுடன் பணியாற்றி இருந்திருந்தால், கடன்களை நேரகாலத்துடன் திருப்பிக்கொடுத்திருப்பார்களென 8.8 சதவீதமான தவறியவர்கள் அறிவித்தனர். சில தவறியவர்கள் (7.8 சதவீதமானோர்) கடனுகப்பெற்ற பணத்தை குறித்த நேரத்தில் திருப்பிக்கொடுப்பதனுல் ஒருவித பயனும் இருப்பதாகக் கருதவில்லை. காரணம் மக்கள் வங்கிக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் அப்பணத்தினைத் திருப்பிக் கொடுக்க மாட்டார்கள் அல்லது அவ்வாறு கொடுக்கப்பட்ட பணத்தினை பிழையான வழியில் பயன்படுத்துவர் என அவர்கள் எண்ணியமையேயாகும். மொத்தத் தொகையில் இதுவரையில் காலங்கடந்த கடன்களின் பங்கு 11.3 சதவீதமாக விளங்கிற்று.

காலங்கடந்த கடன்களைத் தீர்ப்பதற்குரிய தராதரத்தினையும், இயலளவினையும் மதிப்பிடுவதற்காக, வருமானம் செலவு பற்றிய தரவுகள் தொடர்புபடுத்தப்பட்டது. பின்வரும் அட்டவணையில், காலங்கடந்த கடன்களைத் தீர்க்கத் தவறிவர்களுக்குரிய இயலளவு அவர்களுடைய வருமானத்திற்கு எதிராகக் காட்டப்பட்டுள்ளது.

### அட்டவணை II (ஊ) 2

**மீன் பிடியின் பெறுமதி, நடைமுறைச் செலவுகள், மொத்த இலாபம், பெரும் திருத்தங்களுக்கான செலவுகள் — வள்ளத்துக்கான ஆண்டுச் சராசரி**

ரூபாய்களில்

| வள்ளத்துக்கு உரித்துடையவர்கள் | மீன் பிடியின் பெறுமதி (1) | நடைமுறைச் செலவுகள் (2) | மொத்த இலாபம் (1) - (2) | பெரும் திருத்தங்களுக்கான செலவுகள் |
|---|---|---|---|---|
| கூட்டுறவு ... ... | 20,229 | 14,729 | 5,500 | 2,505 |
| தனியார் . ... | 29,265 | 22,543 | 6,722 | 3,043 |
| எல்லா வள்ளங்களும் ... | 28,655 | 22,015 | 6,640 | 3,006 |

மாதமொன்றிற்கு ரூ. 250/-க்குக் குறைவாக வருமானம் பெறுகின்ற கடன் கட்டத் தவறியவர்கள் எல்லாக் கடன்களையும் திருப்பிக் கொடுப்பதற்குரிய நிலையில் இல்லையென கண்டுபிடிக்கப்பட்டது. அதே நேரத்தில் ரூ. 250/- இற்கு மேலாகவருமானம் பெறுபவர்கள்,திருப்பிக்கொடுக்கக் கூடிய நிலைமையில் இருந்ததுடன், எல்லாச்செலவுகளும் நீக்கி, சாதகமான நிலுவையும் கொண்டிருந்தனர்.

மொத்த வருமானத்தில் 63 சதவீதத்தினை பெற்றுக்கொண்ட 29 சதவீதமான கடன்கட்டத்தவறியவர்கள் இறுதிவகுப்பைச் சார்ந்தவர்கள். இவ்வருமானத்தை பெறுபவர்கள் புதிய விவசாயக் கடன்கள் திட்டத்தின் கீழ் உள்ள எல்லாக் கடன்பாடுகளிலும், 45, சதவீதத்தினை கடனாகப் பெற்றனர். அவர்கள் கடன்களின் முழுத்தொகையினையும் திருப்பிக்கொடுக்கக்கூடிய நிலையில் இருந்த போதிலும், அவர்களுடைய வருமானத்துக்கேற்ற முறையில் அமையவில்லை. மாதமொன்றிற்கு ரூ. 1,000/- இற்கு மேலாக வருமானம் பெற்ற கடன்கட்டத் தவறியவர்கள் கடன்களில் 52 சதவீதத்தினை திருப்பிக்கொடுத்தனர். அதே நேரத்தில் 60 சதவீதமான திருப்பிக்கொடுப்பனவுகளுக்கு மாதாந்தம் ரூ.50/- இல் இருந்து ரூ.100/- வரையுள்ள வருமானப்பிரிவினரே காரணமாகும்.

எல்லாப்புதிய வேளாண்மைக் கடன்களிலும் உள்ள தவறுகளில், 10 சதவீதமானவை, பயிர் விளையாமை காரணமாக ஏற்பட்டது என அளவையினால் பெறப்பட்ட முடிவுகளை அடிப்படையாகக் கொண்டு மதிப்பிடப்பட்டது. கிட்டத்தட்ட 45 சதவீதமான கடன்கள், தொடர்செய்கை செய்வதற்குச் சரியான முறைகள் இன்மையினால்; மீளப்பெற முடியாமல் போனது. ஒழுங்காக மீளப்பெறும் அமைப்பு கிட்டத்தட்ட 25 சதவீதத்தால் குறைந்திருக்கும்.

**மிறிச, பேருவளை பகுதிகளில் உள்ள மீன் பிடிக்கைத்தொழிலின் இயலளவு பயன்பாடு பற்றிய அளவை.**

மீன்படி அமைச்சின் வேண்டுகோளுக்கு இணங்க மத்திய வங்கியானது, பேருவளை, மிறிச ஆகிய பகுதிகளின் மீன்படி உற்பத்தி, சந்தைப்படுத்தல் என்பனவற்றிற்கு வாய்ப்புகள் பற்றியும் நடைமுறையிலே உள்ள அளவுகளின் பயன்பாடு பற்றியும் ஒரு அளவை நடாத்தியது.

இந்த அளவை பின்வரும் விடயங்களை உள்ளடக்குகின்றது :-

(அ) படகுகளை இயக்குவதில் அதுவும் குறிப்பாக இயந்திரப் படகுகளை இயக்குவதில் உள்ள சிக்கனம்பற்றிய விசாரணை.

(ஆ) மீன்பிடிக் குடியிருப்பாளர்களுடைய குடும்பப் பருமன், கல்வி, வேலை வாய்ப்பு பற்றிய விசாரணை.

மேலும் தெரிந்தெடுக்கப்பட்ட இரண்டு மீன்பிடித் துறைமுகங்களுக்கு அருகாமையில் கிடைக்கக்கூடிய கரையேறல், பாதுகாப்பாக நங்கூரம் பாய்ச்சல், படகுகள், இயந்திரங்கள் பழுதுபார்த்தல், எண்ணெய் எரிபொருள் வழங்கல், மீன் சந்தைப்படுத்தல் ஆகிய வசதிகள் பற்றிய பொது விசாரணையும் செய்யப்பட்டது.

இந்த இரண்டு பகுதிகளிலும் உள்ள இயந்திரப் படகுனரின் ஒரு நிறைவான நிரலே இவ்வளவையில் மாதிரிச்சட்டமாகப் பயன்பட்டது. பேருவளையில் 74 இயந்திரப்படகுகளும், மிறிசவில் 85 இயந்திரப்படகுகளும் இருந்தன.

ஒரு சிறிய மாதிரியாக இயந்திரமற்ற படகுகளும் கணக்கிலெடுக்கப்பட்டது. மேலும் மீன்பிடிப் படகுகள் அளவையைவிட மீன்பிடிக் குடியிருப்பாளர்கள் பற்றிய ஒரு மாதிரி அளவையும் கூடச்செய்யப்பட்டது.

பேருவளையில் உள்ள 272 மீன்பிடிக் குடியிருப்பாளர்களில், 68 குடியிருப்புகள் மாதிரி அளவைக்கு பயன்படுத்தப்பட்டது. மிறிசவில் இருந்த 625 மீன்பிடிக்குடியிருப்பாளர்களில் 100 குடியிருப்பாளர்களே மாதிரி அளவைக்குப் பயன்படுத்தப்பட்டு அவற்றில் 93 பேருடன் நேர்முக உரையாடல் நடத்தப்பட்டது.

வெளிக்கள வேலை பேருவளையில் 1972ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 19ஆந் திகதி தொடங்கி 30ஆந் திகதி முடிவடைந்தது. மிறிசவில் அளவை மேமாதம் 3ஆந் திகதி தொடங்கி 15ஆந் திகதிவரை 12 நாட்களாக நடைபெற்றது. பிடிக்கப்பட்ட மீன்களின் தரவுகள் தொடர்ச்சியாக 7 நாட்களுக்கு எடுக்கப்பட்டது.

பகுப்பாய்வானது, 3½ தொன்னுள்ள இயந்திர மீன்பிடிப்படகுகளின் பயன்பாட்டின், பொருளியல் அம்சங்கள் பற்றியதாகும், கீழே காட்டியவாறு, ஒரு படகிற்குரிய சராசரி மொத்த இலாபமானது (அதாவது நிர்வாக, பெறுமானத் தேய்வுச் செலவுகள் கழிப்பதற்கு முன்பு) கிட்டத்தட்ட ரூ. 6,600/- ஆக மதிப்பிடப்பட்டது. ஒரு படகினது மூலதன முதலீட்டினை ரூ. 27,000/- ஆகக் கொண்டால் இவ்வாறாக மதிப்பிடப்பட்ட மொத்த இலாபம் மூலதனத்தின் 25 சதவீதமான விளைவினைக் கொண்டதாகும்.

### அட்டவணை II (ஊ) 3

### கொடுபடவேண்டிய கடன்களைத் தீர்க்கும் இயலளவுடன் வருமானத் தொகுதிகளின் கொடுபடவேண்டிய கடன்களை ஒப்பிடுதல்

| வருமான வகுப்பு ரூபாய்/மாதம் | கொடுபடவேண்டிய கடன்கள் (வட்டியும் வருமானத்தின் சதவீதமாக) | | தெரிவிக்கப்பட்ட எல்லா செலவினங்களும் தவிர்ந்த வருமானத்தின் விகிதாசாரம் | கொடுபடவேண்டிய கடன்களைத் தீர்க்கும் இயலளவு |
|---|---|---|---|---|
| | புதிய விவசாயக் கடன்கள் | எல்லாக் கடன்களும் | | |
| (1) | (2) | (3) | (4) | (5) (4) - ((3) |
| 0— 50 | 19.9 | 43.1 | — 45.2 | — 88.3 |
| 51— 100 | 10.4 | 21.7 | — 20.5 | — 42.2 |
| 101— 250 | 5.9 | 13.0 | + 0.2 | — 12.8 |
| 251— 500 | 4.7 | 11.9 | + 14.7 | + 2.8 |
| 501— 750 | 3.0 | 7.6 | + 20.1 | + 12.5 |
| 751—1000 | 3.4 | 16.7 | + 48.5 | + 31.8 |
| 1000க்கு மேல் | 1.8 | 10.0 | + 50.3 | + 40.3 |
| மொத்தம் | 4.8 | 12.6 | + 8.3 | — 4.3 |

சராசரியாக நோக்குமிடத்து, ஒரு வருடத்தில் ஒரு படகிற்கான பாரிய பழுதுகளின் செலவு. ரூ. 3,006/- ஆக மதிப்பிடப்பட்டது. இத்தொகையினைப் பெறுமானத்தேய்வாக எடுத்துக்கொண்டால் மூலதனத்தில் உள்ள தேறிய விளைவு 13.5 சதவீதமாகும். மீன்பிடித்திணைக்களத்தில் இருந்து கேள்விக் கொள்வனவில் பெறப்பட்ட படகொன்றிற்கு, முதலீட்டுப்பெறுமதியில் 24 சதவீதம், வருடாந்தக் கடன்தொகையாக பணம் கட்டுவதற்காகத் தேவைப்பட்டது. படகு உரிமையாளர், படகினை இயக்குவதில் நட்டத்தினை அடைகின்முரோ என்ற கேள்விக்கும் இடம் ஏற்படுகிறது. உண்மையில் படகுச் சொந்தக்காரன் மூலதனத்தில் 50 சதவீதத்தினையும், வட்டியினையும் காட்டல் வேண்டும். இது மொத்தத்தில் மூலதனத்தில் 60 சதவீதமாகும். எனவே, படகு உரிமையாளன் 13.5 சதவீதத்தினை விளைவாகப் பெற்ருல் $4\frac{1}{2}$ வருடத்தில் கடனைத்தீர்க்க முடியும். பிற்காலத்திலும் பார்க்கத் தொடக்க காலத்தில் இலாபம் கூடுதலானது என்ற கருத்தினை கவனத்திற்கு எடுத்துக்கொண்டால் கடனை குறுகிய காலத்தில் தீர்த்து விடலாம் என்ற முடிவிற்கு ஒருவர் வரக்கூடும். அளவைத்தரவுகளில் இருந்து தயாரிக்கப்பட்ட பின்வரும் அட்டவணை கடனை $3\frac{1}{2}$ வருடங்களளவில் தீர்த்துவிடலாம் என்பதைக் காட்டுகிறது.

| படகுகளின் காலம் (வருடங்கள்) | மூலதனத்தின் வீத அடிப்படையிலான வருடாந்தத்தேறிய இலாபம் |
|---|---|
| 1 | 22 |
| 2 | 17 |
| 3 | 16 |
| 4 | 12 |
| 5 | 11 |
| 6 | 12 |
| 7 | 5 |
| 8 | 10 |
| 9 | 12 |

முதலீட்டினது 13 சதவீதமான விளைவு, ஓர் குறைந்த அளவாகும். பின்வரும் முறைகளால் இலாபத்தினை அதிகரிக்க இடமுண்டு என்று கூறுவதற்குச் சான்றுகள் உள.

(அ) மீன்பிடிப்பளவை அதிகரிப்பதன் மூலம்.

(ஆ) படகுகளை மிகக் கவனமாக இயக்குவதனுல், பராமரிப்புச் செலவு குறைவதன் மூலமே, சிறிய, பெரிய பழுது பார்த்தல்களுக்கான வருடாந்தச் செலவு, மட்டுமே மூலதனச் செலவில் 16 சதவீதத்தினைக்

கொண்டுள்ளது. இது அநேகமாக ஏற்படுவதற்குப் பின்வருவன காரணமாகும். அவையாவன, உதிரிப்பாகங்களைப் பெறுவதில் உள்ள சிரமங்கள், உதிரிப்பாகங்களின் கூடுதலான விலைகள் சுமுகமான பழுதுபார்க்கும் வசதிகள் கிடையாமை, படகுச் சொந்தக்காரர்கள் படகுகளில் ஏற்படுகின்ற இயந்திரக் கோளாறுகளை உடனடியாகக் கவனியாமை.

ஒருமுறைக்கான பிடிப்பளவில் கணிசமானளவு அதிகரிப்பு ஏற்படல் வேண்டுமென்பது தான் குறிக்கோளாகும் என்று புலனாகின்றது. இது மேலதிக நிறுவன முயற்சியின்றி சாதிக்கக்கூடியதாக இருக்கும். ஒரு முறைக்கான பிடிப்பளவில் உடனடியான அதிகரிப்பு ஏற்படுவதற்கு போதிய மீன்பிடிக் கருவிகள் இல்லாமல் இருப்பதே தடையாக விளங்குகிறது. மேலும் மதிப்பிடப் பட்டவாறு ஒரு படகிற்கான, ஒரு மாதத்திற்குரிய 13 மீன்பிடிப் பயணங்கள், மீன்பிடிப்படகுகள் கணிசமானளவு பாவிக்கப்படாது இருத்தலைச் சுட்டிக் காட்டுகிறது. பயண எண்ணிக்கைகள் உகந்த அமைப்பு முறையினாலும், நிர்வாகத்தாலும் கணிசமான அளவினால் அதிகரிக்க முடியும் எனத்தென்படு கிறது. இது தற்சமயம் உள்ள சொத்துக்களின் பாவனையை அதிகரித்தற்குரிய ஒரு வழியாகும்.

### 1973ஆம் ஆண்டிற்குரிய நுகர்வோர் நிதி அளவை

1953ஆம் ஆண்டிலும் 1963ஆம் ஆண்டிலும் மத்திய வங்கியானது நுகர் வோர் நிதிகள் பற்றிய இரண்டு அளவைகளை நடாத்தியது. இந்த மூன்றாம் அளவை தொடர்பான தொடக்க வேலை 1973ஆம் ஆண்டு சனவரி மாதம் ஆரம்பிப்பதாக இருந்தபோதிலும் 1972ஆம் ஆண்டிலேயே நடைபெற்றது.

இது தொடர்பான மக்கட்தொகை, வேலைவாய்ப்புப் பற்றிய தரவுகள் சேகரிக்கப்பட்டாலும், குடியிருப்பாளரது வருமானமும், செலவுமே விசாரணையின் முக்கிய பகுதியாக அமையும். தெரிந்தெடுக்கப்பட்ட ஒவ்வொரு குடியிருப்பாளர் களைப் பொறுத்தவரையிலும் தொடர்ச்சியான 7 நாட்களுக்குரிய உணவு மீதான செலவுபற்றிய விபரமான தரவுகள் இக்காலப்பகுதியில் 3 முறை சந்திப்பதன் மூலம் பதிவு செய்யப்படும். மேலும், 2 மாத காலப்பகுதிக்குரிய வீடமைப்பு, உடை, எரிபொருளும் வெளிச்சமும் போக்குவரத்து, கல்வி சடங்குகள், மருந்து, மற்றைய பொருட்களும் சேவைகளும் பற்றிய செலவீடும் பெறப்படும். நீடித்த நுகர்வோர் பொருட்கள் பற்றியும் முதலீடுபற்றியும் உள்ள செலவீட்டுக் காலப்பகுதி 6 மாதங்களாக இருக்கும்.

1963ஆம் ஆண்டு அளவைபோல நகரம், கிராமம் தோட்டத்துறைகள் என்ற அடிப்படையிலும் ஏறக்குறைய ஒரே பொருளாதாரத்தன்மையுடையவை

என்று கருதப்பட்ட நிர்வாக மாவட்டங்களை 4 வலயங்களில் ஒன்றாக இணைத்து அவற்றின் வெவ்வேறு தன்மைகளைப் பகுப்பாய்வதே இவ்வளவையின் நோக்க மாகும். கொழும்பு நகருக்குத் தேவையான தரவுகள் கடந்தகாலங்களில் எத்தனையோ சந்தர்ப்பங்களில் தேவைப்பட்டது. எனவே, கொழும்பு நகராண்மைக் கழக எல்லையளவுக்குத் தேவையான தரவுகளைத் தனியாகப் பெறுவது தேவையெனக் கருதப்பட்டது.

மொத்தத்தில், தீவு முழுவதிலும் 5,000 குடியிருப்பாளர்கள் மாதிரிக்கு எடுக்கப்பட்டார்கள். மாதிரித் தெரிவுக்காக முழு மக்கட் தொகையும் 13 தரங்களாகப் பாகுபடுத்தப்பட்டன. ஒவ்வொரு தரத்திற்கும் மாதிரிக்குடித் குடித்தொகைப் பிரிவு எடுத்துக்கொள்ளப்பட்டது. அவ்வாறு எடுக்கப்பட்ட ஒவ்வொரு குடித்தொகைப் பிரிவிற்கும் ஒரேயளவு குடியிருப்பாளர்கள் தெரிவு செய்யப்பட்டார்கள்.